**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

CC.No. 231/2009

Deposition Of Witness for — Prosecution PW 1 / Defense / Court

Name — சம்சுதீன்

Husband Name / Father's Name — வரிசை இபுராகிம்

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of September 2019.

நான் தற்போது பாளையங்கோட்டை மகராஜன்நகரில் வசித்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். என்னுடன் சுல்தான் முகைதீன் மகன் செய்யது இப்ராகிம், சதக் மரக்காயர் மகன் புகாரிசலீம் ஆகியோர் என்னுடன் தொழில் செய்து வருகின்றனர். நான்குநேரி சப்ரெஜிஸ்ரேசன் சரகம் கீழகாடுவெட்டி கிராம சர்வே எண்கள்.22லிருந்து 40 வரை அதன் உட்பிரிவுகள் உட்பட மொத்தம் சுமார் 95 ஏக்கர் இடம் எங்கள் பேரில் கிரையம் பெற்றிருந்தோம். என்னுடைய பெயரிலும், செய்யது இப்ராகிம் பெயரிலும் 22 ஏக்கர் நிலம் ஆவண எண்.2751/2006-ன்படி 11.09.2006ல் கிரையம் பெற்றோம். மற்றொரு இடம் செய்யது இப்ராகிம் பெயரிலும், புகாரிசலீம் பெயரிலும் ஆவண எண். 2752/2006-ன்படி 11.09.2006ல் கிரையம் பெற்றோம். மூன்றாவது செய்யது இப்ராகிம் பெயரிலும், புகாரி சலீம் பெயரிலும் ஆவண எண்.2753/2006-ன்படி 11.09.2006ல் கிரையம் பெற்றோம். மேற்படி கிரையங்களின் மூலம் சுமார் 90 முதல் 95 ஏக்கர் வரையிலான இடம் கிரையம் பெறப்பட்டது. மேற்படி இடத்தை சீர்செய்து பட்டா எங்கள் பெயரில் மாற்றம் செய்து ஜெம்நகர், நோவாநகர் என்ற பெயரில் மாவட்ட பதிவாளர் இடத்தணிக்கை செய்து எங்கள் பேரில் இடம் பதிவு செய்யப்பட்டது. சங்கர்ரெட்டியார் மனைவி ஆவுடையம்மாள் எந்தவித வாரிசுகளோ உரிமையோ, அனுபவமோ இல்லை. பானான்குளத்தை சேர்ந்த கொம்பையாதேவர் மகன் விஜயகுமார் என்பவரும், வடக்கு அரசன் குளம் முத்தையா தேவர் மகன் தங்கவேலு ஆகிய மூவரும் சேர்ந்து சதிதிட்டம் தீட்டி 05.08.2008ல் ஒரு பொதுஅதிகார ஆவணம் மூலம் 398/2008படி எங்களை மேற்படி சொத்துக்களுக்குள் வரவிடாமல் தடுத்தனர். 08.09.2008ம்

தேதி காலை 10.00 மணியளவில் நாங்கள் சூரப்பபுரத்தில் உள்ள ஆவுடையம்மாள் வீட்டில் வைத்து இது சம்பந்தமாக கேட்டதற்கு விஜயகுமாரும், தங்கவேலும் ஆவுடையம்மாளுடன் சேர்ந்து இடம் ஆவுடையம்மாளுக்கு சொந்தமானது உங்களை கொலை செய்து விடுவோம் என்று மிரட்டினார். நாங்கள் எங்கள் உயிருக்கு பயந்து மூன்றடைப்பு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நாங்கள் கொடுத்தது தான். அதிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.1. காவல்துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.